भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

नई दिल्ली, मंगलवार, 20, अकटोबर 1998/1920 सका

New Delhi, Tuesday 20th October 1998/1920 Saga

*புது தில்லி, 1998 அக்டோபர் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1920 சக*

---

## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department)

New Delhi, the 20th October 1998

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டமியற்றுத் துறை)*

*புது தில்லி, 20 அக்டோபர் 1998*

The translation in Tamil of the Registration of Births and Deaths Act, 1969 (18 of 1969), The Medical Termination of Pregnancy Act, 1971 (34 of 1971), The Voluntary Surrender of Salaries (Exemption from Taxation) Act, 1961 (46 of 1961), The Excise (Malt Liquors) Act, 1890 (13 of 1890), The Government Buildings Act, 1899 (4 of 1899), The Indian Easements Act, 1882 (V of 1882), The Personal Injuries (Compensation Insurance) Act, 1963 (37 of 1963), The Provisional Collection of Taxes Act, 1931 (16 of 1931), The Marriages Validation Act, 1892 (2 of 1892), The River Boards Act, 1956 (49 of 1956), The Telegraph Wires (Unlawful Possession) Act, 1950 (74 of 1950), The Commissions of Inquiry Act, 1952 (60 of 1952), The Indian Statistical Institute Act, 1959 (57 of 1959), The Legal Tender (Inscribed Notes) Act, 1964 (28 of 1964), The Payment of Wages Act, 1936 (4 of 1936), The Citizenship Act, 1955 (57 of 1955), are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1969 (18/1969), கருவுற்றிருத்தலை மருத்துவ முறையில் கலைப்பதற்கான சட்டம், 1971 (34/1971), தம் விருப்பாக வரையூதியங்களை ஒப்புவித்துவிடுதல் (வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பு) சட்டம், 1961 (46/1961), (மாத்தேறல்கள்) ஆயச் சட்டம், 1890 (13/1890), அரசாங்கக் கட்டடங்கள் சட்டம், 1899 (4/1899), இந்திய வசதியுரிமைகள் சட்டம், 1882 (V/1882), உடலூறுகள் (சரியீட்டுக் காப்பீடு) சட்டம், 1963 (37/1963), தாற்காலிகமாக வரிகள் ஈட்டுதல் சட்டம், 1931 (16/1931), திருமணங்களைச் செல்லுந்தன்மையுடையனவாக்குதல் சட்டம், 1882 (2/1882), ஆற்றுவாரியங்கள் சட்டம், 1956 (49/1956), தந்திக் கம்பிகள் (சட்ட முரணான உடைமை) சட்டம், 1950 (79/1950), விசாரணை ஆணையங்கள் சட்டம், 1952 (60/1952), இந்தியப் புள்ளியியல் சட்டம், 1959 (57/1959), சட்டச் செலாவணி (பொறிக்கப்பட்ட பணத்தாள்கள்) சட்டம், 1964 (28/1964), கூலிகொடுத்தல் சட்டம், 1936 (4/1936), குடிமைச் சட்டம், 1955 (57/1955), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமையுடையனவான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமையுடையனவான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 74.00

# திருமணங்களைச் செல்லுந்தன்மையுடையனவாக்குதல் சட்டம், 1892

(சட்ட எண் 2/1892)

[1892, சனவரி 29]

இந்தியக் கிறித்தவர் திருமணச் சட்டம், 1872இன் பகுதி VIஇன்படி உள்ளார்ந்து நிறைவேற்றப்பட்ட குறித்தசில திருமணங்களைச் செல்லுந்தன்மையுடையனவாக்குவதற்கான ஒரு சட்டம்.

இருவரில் ஒருவர் மட்டுமே இந்தியக் கிறித்தவராக இருக்கின்றவரிடையேயான திருமணங்களாக இல்லாமல், ஆனால் இருவருமே இந்தியக் கிறித்தவர்களாக இருக்கின்றவரிடையேயான திருமணங்களின்
15/1872 உள்ளார்ந்த நிறைவேற்றத்திற்கு இந்தியக் கிறித்தவர் திருமணச் சட்டம், 1872இன் பகுதி VIஇல் வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதால்;

மற்றும், மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 9இன்படி உரிமம் வழங்கப்பெற்றவர்கள், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில், சட்டம் பற்றிய அறியாமையினால், இருவரில் ஒருவர் ஓர் இந்தியக் கிறித்தவராகவும், மற்றவர் ஓர் இந்தியக் கிறித்தவர் அல்லாதவராகவும் இருக்கின்றவரிடையேயான திருமணங்கள் மேற்சொன்ன பகுதியின்படி தங்கள் முன்னிலையில் உள்ளார்ந்து நிறைவேற்றப்படுவதற்கு அனுமதியளித்திருக்கிறார்கள் என்பதால்;

மேலும், நல்லெண்ணத்தில் உள்ளார்ந்து நிறைவேற்றப்பட்ட அத்தகைய திருமணங்கள் செல்லுந்தன்மையுடையனவாக்கப்படுதல் வேண்டும் என்பது உகந்ததாக இருக்கிறது என்பதால்;

ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது:—

1. நீக்கறவு செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் சட்டம், 1914 இன் (X/1914) பிரிவு 3 இனாலும் இணைப்புப்பட்டியல் II இனாலும் நீக்கறவு செய்யப்பட்டது. தொடக்கம்.

2. இந்தச் சட்டத்தில் இந்தியக் கிறித்தவர் என்னும் சொற்றொடர், இந்தியக் பொருள்-
15/1872 கிறித்தவர் திருமணச் சட்டம், 1872இல் உள்ளதுபோன்ற அதே பொருளினை வரையறை.
உடையதாகும்.

3. இருவரில் ஒருவர் மட்டுமே இந்தியக் கிறித்தவராக இருந்தவரிடையே, முறையற்ற
15/1872 இந்தியக் கிறித்தவர் திருமணச் சட்டம், 1872இன் பகுதி VIஇன்படி ஏற்கெனவே திருமணங்களின்
உள்ளார்ந்து நிறைவேற்றப்பட்ட திருமணங்கள் அனைத்தும், இருவருமே செல்லுந்தன்மை.
இந்தியக் கிறித்தவர்களாக இருந்தவரிடையே அத்தகைய திருமணங்கள் உள்ளார்ந்து நிறைவேற்றப்பட்டிருந்தாற்போன்றே, சட்டச்சீர்மையும் செல்லுந்தன்மையும் உடையன ஆகும்:

**வரம்புரையாக:** இந்தப் பிரிவில் உள்ள எதுவும், திருமணம் முற்றிலும் இல்லாநிலையதாகும் என்று நீதிமுறையில் விளம்புகை செய்யப்பட்டிருக்கிற ஏதேனும் திருமணத்திற்கு அல்லது, அத்தகைய திருமணம் உள்ளார்ந்து நிறைவேற்றப்பட்டதற்குப் பின்பும், இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்கு முன்பும், தரப்பினரில் எவரேனும் ஒருவர் செல்லுந்தன்மையுடைய திருமணம் ஒன்றைச் செய்து கொண்டிருக்கிற ஏதேனும் நேர்விற்குப் பொருந்துதல் ஆகாது.

4. மேலேகண்ட கடைசி பிரிவினால் சட்டசீர்மையும் செல்லுந்தன்மையும் முறையற்ற
உடையவை என்று விளம்புகை செய்யப்பட்ட திருமணங்களின் திருமண
உறுதிச்சான்றுகளும் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டத்திற்கு பதிவேடுகளின்
இணங்கியவாறு பாதுகாப்பாக வைக்கப்பட்ட பதிவுப் புத்தகங்களும், செல்லுந்தன்மை.
அவற்றிலிருந்து எடுக்கப்பட்ட உண்மையான உரியவாறு உறுதிச்சான்றிடப்பட்ட எடுகுறிப்புகளின் உறுதிச் சான்றிடப்பட்ட படிகளும் மேற்சொன்ன அத்தகைய திருமணங்களுடன் தொடர்புடையனவாக இருக்கின்ற அந்த அளவுக்கு, அந்தப் பதிவுப்புத்தகங்கள் மற்றும் எடுகுறிப்புகள், அத்தகைய திருமணங்கள், இருவருமே இந்தியக் கிறித்தவர்களாக இருந்து உள்ளார்ந்து நிறைவேற்றப்பட்டிருந்தாற்போன்று, அத்தகைய திருமணங்களின் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

1872 சட்டம் [illegible]இன் படியான திருமணங்களுக்குச் சட்டம் பொருந்துதல்.

5. இந்தச் சட்டத்தில், இந்தியக் கிறித்தவர் திருமணச் சட்டம், 1872க்கான சுட்டுகைகள் தேவைப்படலாகும் அந்த அளவுக்கு இந்தியத் திருமணச் சட்டம், 1865இன் நேரிணையான பகுதிகளுக்கும் பொருந்துவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

முறையற்ற திருமணங்களை உள்ளார்ந்து நிறைவேற்றுதலுக்கான தண்டனை.

6. இந்தியக் கிறித்தவர்களிடையே நடைபெறும் திருமணத்திற்கான உறுதிச் சான்றுகளை வழங்குவதற்கு மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 9இன்படி உரிமம் வழங்கப்பட்ட நபர் எவரும், இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு எந்த நேரத்திலும், மேற்சொன்ன சட்டத்தின் பகுதி VI இன்படியான திருமணம் எதையும் அத்தகைய திருமணத்தின் அல்லது செயல்விளைவு உண்டு பண்ணப்பட்ட திருமணத்தின் தரப்பினர்களில் ஒருவர் உள்ளார்ந்து நிறைவேற்றப்படும் தேதியன்று ஒரு கிறித்தவராக இல்லாதிருந்தார் என்பதை அறிந்தே, அத்தகைய திருமணத்தை உள்ளார்ந்து நிறைவேற்றி வைக்கிறார் அல்லது உள்ளார்ந்து நிறைவேற்றுவதற்குச் செயல்விளைவை உண்டுபண்ணுகிறார் அல்லது அதில் சொல்லப்பட்டவாறு அத்தகைய உறுதிச் சான்று எதனையும் வழங்குவாராயின், அவர் தம் உரிமம், அறவு செய்யப்படுவதற்கு உள்ளாவார்; மற்றும் அதற்குக் கூடுதலாக மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 73 இனால் தடைசெய்யப்பட்ட ஒரு குற்றச் செயல் ஒன்றைச் செய்துள்ளவராகக் கொள்ளப்படுவார் மற்றும் அதற்கிணங்க தண்டிக்கப்படுவார்.